செய்தி வெளியீடு எண் 328 தேதி . 27.06.2009

பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்களில் ஒன்றான இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்படும் பணிகள் அனைத்து வட்டங்களிலும் மீண்டும் துவக்கப்பட்டுள்ளன. இதுவரை பயனாளிகள் தேர்வு செய்யப்படாத கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இப்பணிகள் துவங்கியுள்ளன. பயனாளிகள் தேர்வு செய்யும் பணி கிராம அளவில் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்க பயனாளிகள் தேர்வு செய்யும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு பயனாளிகள் பட்டியல் பெறப்படுகின்றன. பயனாளிகள் கீழ்க் கண்ட தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) பயனாளி பெண்ணாக இருக்க வேண்டும்.

(ஆ) பயனாளி பெயர் குடும்ப அட்டையில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) பயனாளியோ அவரது குடும்பத்தில் உள்ளவரோ ஏற்கனவே அவரது பெயரில் எரிவாயு இணைப்பு பெற்றிருக்கக் கூடாது.

(ஈ) பயனாளி அந்தப் பகுதியில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(உ) பயனாளியின் வீட்டில் எரிவாயு இணைப்பு வைத்து பயன்படுத்தும் வகையில் சமையல் மேடை இருக்க வேண்டும் (அல்லது) அதற்கான மேடை அமைத்துத் தர முன்வர வேண்டும்.

தகுதியுள்ள பயனாளிகள் பட்டியல் மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் அளித்த பின் சம்பந்தப்பட்ட எரிவாயு முகவருக்கு பட்டியல் அனுப்பிவைக்கப்படும். 3வது கட்டத்தில் சென்னை மாவட்டத்திற்கு 31,740 இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்படும் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் பயனாளிகள் சார்பாக இணைப்புக்கான வைப்புத் தொகை அரசால் செலுத்தப்பட்டு இலவச அடுப்புடன் வழங்கப்படுகிறது. முதல் எரிவாயு உருளைக்கான தொகையினை பயனாளிகள் செலுத்திய பிறகு இணைப்பு வழங்கப்படுகிறது.

ஒரு சில நபர்கள் பயனாளிகளிடமிருந்து அதிகத் தொகை வசூலிப்பதாக பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் பயனாளிகளுக்கு கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது. "இலவச எரிவாயு இணைப்பு வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் எரிவாயு அடுப்பு குறித்த பாதுகாப்பு வகுப்பு (Safety Clinic) நடத்தப்படும் பொழுது எரிவாயு உருளைக்கான தொகையினை (சுமார் ரூ.285/– மட்டும்) எரிவாயு விநியோகஸ்தரிடமே அவ்வகுப்பிலேயே செலுத்தி அதற்கான ரசீதினை பெற்றுக் கொள்ள வேண்டும், அதனடிப்படையில் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு அவரவர் வீட்டில் அலுவலர்களால் நேரடியாக வழங்கப்படும் வேறு யாரிடமும் முதல் எரிவாயு உருளைக்கான பணத்தை கொடுத்து ஏமாற வேண்டாம், எனவும் எரிவாயு உருளைக்கான தொகையைக் காட்டிலும் கூடுதலாக எந்த நிலையிலும் தொகை கொடுக்க வேண்டாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்கூறிய அறிவுரைகளை பின்பற்றி இத்திட்டத்தில் பயனடையுமாறு பயனாளிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்கூறியவாறு பயனாளிகள் தேர்விலோ எரிவாயு உருளைக்கான தொகை செலுத்துவதிலோ முறைகேடுகள் நடைபெற்றால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கோ அல்லது வட சென்னையை சேர்ந்தவராக இருப்பின் துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு அலுவலருக்கு தொலைபேசி எண் 28551028 மற்றும் தென் சென்னையை சேர்ந்தவராக இருப்பின் துணை ஆணையாளர் (நகரம்) தெற்கு அலுவலருக்கு தொலைபேசி எண் 28551026ல் தகவல் தெரிவிக்கலாம்.

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**